எண்ணம் ஏற்பட்டாக வேண்டும் என்பதில் ஐயமில்லை. அதற்காகத் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம். வலியுறுத்துவதற்கும் வற்புறுத்துவதற்கும் வேறுபாடு உள்ளது. ஆகவே வலியுறுத்தப்படுகிறது, வற்புறுத்தப்படவில்லை.

Quarrel between a Teacher and an Assistant to the Chief Educational Officer

* 37. *Q.*—THIRU L. BALARAMAN : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether any Police action was taken in connection with the quarrel between a teacher and an Assistant to the Chief Educational Officer on 6th September 1972 in the Office of the Chief Educational Officer, North Arcot District; and

(*b*) if so, the reason for the quarrel ?

கல்வி அதிகாரி உதவியாளர்—ஆசிரியர் தகராறு

திரு. எல். பலராமன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) வட ஆற்காடு மாவட்ட முதன்மைக் கல்வி அதிகாரி அலுவலகத்தில் (Chief Educational Officer) 6—9—1972 ஆம் தேதி முதன்மைக் கல்வி அதிகாரியின் உதவியாளருக்கும், ஆசிரியர் ஒருவருக்கும் தகராறு காரணமாக போலீஸ் நடவடிக்கை எடுக்கப்பட்டதா ?

(இ) ஆமெனில், தகராறுக்குக் காரணம் யாது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : 6—9—1972 புதனன்று வட ஆற்காடு முதன்மைக் கல்வி அலுவலர் அலுவலகத்தில் நேர்முக உதவியாளருக்கும் முதல் நிலைத் தமிழ் ஆசிரியர் திரு. சுந்தரேசன் என்பவருக்கும் தகராறு காரணமாக போலீஸில் புகார் செய்யப்பட்டு, பிறகு சமாச உடன்படிக்கை இருவருக்கும் ஏற்பட்டமையால் தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்ட தமிழாசிரியருக்கு மீண்டும் பணி தரப்பட்டு இருக்கிறது.

முதல் நிலைத் தமிழ் ஆசிரியர் திரு. சுந்தரேசன் ராணுவத்தில் பணி புரியும் தனது சகோதரர், திரு. சுந்தரேசனது மாற்றம் குறித்து எழுதியுள்ள கடிதம் பற்றி முதன்மைக் கல்வி அலுவலரது நேர்முக உதவியாளரிடம் கேட்டபோது இத்தகராறு ஏற்பட்டது.

1973 நவம்பர் 22]

திரு. எல். பலராமன் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், பதில் கூறும்பொழுது, சமரசம் ஏற்பட்டு விட்டது என்று கூறினார்கள். இந்த சமரசத்தை ஏற்படுத்தியவர்கள் யார்? போலீஸுக்குப் போன பிறகு போலீஸாரால் செய்யப்பட்டதா அல்லது அதிகாரிகளுக்குள்ளாகவே ஏற்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, சமரசம் ஏற்பட்டுவிட்டது என்று மட்டும் தெரிகிறது. அதற்குக் காரணமாக இருந்தவர்கள் யார் என்று குறிப்பு இல்லை. சமரசம் என்பதே, தகராறுக்குரிய இரண்டு பேரும் ஒத்துப் போன பிறகுதான் ஏற்படக்கூடியது. அந்த வகையில் போலீஸ் வழக்கு நிறுத்தப்பட்டிருக்கிறது.

ஆனால் இலாகா மூலமாக, ஒரு அரசுத் துறையினுடைய அலுவலர் ஒருவருடைய பணியைச் செய்ய விடாமல் தடுத்தார் என்ற வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அதுபற்றிய விவரம் இப்பொழுது இல்லை.

Starting of a Law College in Madurai

* 38. *Q.*—THIRU D. SANTOSHAM : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether the Senate and the Syndicate of the Madurai University have recommended to the Government of Tamil Nadu to start a Law College in Madurai ; and

(*b*) if so, the action taken thereon ?

மதுரையில் சட்டக் கல்லூரி அமைத்தல்

திரு. டி. சந்தோஷம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மதுரைப் பல்கலைக் கழக ஆட்சிக்குழு, நிர்வாகக்குழு ஆகியவை மதுரையில் சட்டக்கல்லூரி ஒன்றைத் தொடங்குமாறு அரசுக்குப் பரிந்துரைத்துள்ளனவா ?

(இ) ஆமெனில், அதன் மேல் எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இந்த வினா எழவில்லை.